இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

(இந்தியாவில் நிறுவப்பட்டது)

தலைமையகம்: 763 அண்ணா சாலை, சென்னை 600 002

31 மார்ச் 2023 நிலவிய இருப்புநிலைக் குறிப்பு

(Rs.000கணக்கில்)

	அட்டவணை	31.03.23ல்	31.03.22ல்
மூலதனமும் பொறுப்புகளும்			
மூலதனம்	01	18902 41 23	18902 41 23
ஒதுக்கீடுகளும் மிகுதிகளும்	02	6360 53 25	4097 98 46
வைப்புத் தொகை	03	260883 29 05	262158 92 48
பெறப்பட்ட கடன்கள்	04	20803 77 19	3070 63 66
இதர பொறுப்புகளும் ஒதுக்குகளும்	05	6795 81 65	11147 21 06
மொத்தம்		**313745 82 37**	**299377 16 89**
சொத்துகள்			
இந்திய ரிசர்வ் வங்கியில் உள்ள இருப்பும் ரொக்கமும்	06	17148 35 62	22748 99 35
வங்கிகளில் உள்ள இருப்பும், கேட்டவுடன் அல்லது குறுகிய காலத்தில் திரும்பப் பெறும் பணமும்	07	3458 72 71	14024 19 93
முதலீடுகள்	08	94170 41 04	98179 31 28
கடன் தொகைகள்	09	178052 57 37	144243 52 45
நிலையான சொத்துகள்	10	3709 97 69	3364 89 66
இதர சொத்துக்கள்	11	17205 77 94	16816 24 22
மொத்தம்		**313745 82 37**	**299377 16 89**
சார்புநிலைப் பொறுப்புகள்	12	196131 44 96	97998 90 15
வசூலிக்க வேண்டிய உண்டியல்கள்		19547 85 75	17216 22 01
குறிப்பிடத்தக்க கணக்கு கொள்கைகள்	17		
கணக்குகள் பற்றிய குறிப்புகள்	18		
		2022 - 23	**2021 - 22**
அடுக்கு 1 மூலதனம் (%)		12.88%	10.71%
மொத்த மூலதன விகிதம் (CRAR) %		16.10%	13.83%

2023 மார்ச் 31ல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

(Rs.000கணக்கில்)

	அட்டவணை	31.03.23ல் முடிவுற்ற ஆண்டு	31.03.22ல் முடிவுற்ற ஆண்டு
வருமானம்			
வட்டி வருமானம்	13	19400 32 62	16729 86 62
இதர வருமானம்	14	4108 74 82	4903 01 99
மொத்தம்		**23509 07 44**	**21632 88 61**
செலவு			
வட்டிச் செலவு	15	11145 44 45	10418 72 85
நடைமுறைச் செலவுகள்	16	6421 46 32	5451 24 36
ஒதுக்குகளும் சார்புநிலைகளும் (நிகரம்)		3843 38 07	4053 37 13
மொத்தம்		**21410 28 84**	**19923 34 34**
லாபம் / நட்டம் (-)			
ஆண்டுக்குரிய நிகர லாபம் / நட்டம் (-)		2098 78 60	1709 54 26
முன்கொண்டுவரப்பட்ட லாபம் / நட்டம் (-)		-17999 28 75	-18813 86 23
மொத்தம்		**-15900 50 15**	**- 17104 31 97**
பகிர்வுகள்			
சட்டப்பூர்வ காப்புநிதிக்கு மாற்றியது		524 69 65	493 20 56
வருமான மற்றும் இதர காப்புநிதிகளுக்கு மாற்றியது			
மூலதன காப்புநிதிக்கு மாற்றியது		23 50 06	111 76 22
முதலீட்டு ஏற்ற இறக்க காப்புநிதிக்கு மாற்றியது		0	290 00 00
முன்மொழியப்பட்ட ஈவுத்தொகை (ஈவு வரி உட்பட)		0	0
இருப்புநிலைக் குறிப்பில் சேர்க்கப்பட்ட தொகை		-16448 69 86	-17999 28 75
மொத்தம்		**-15900 50 15**	**-17104 31 97**
பங்கு ஒன்றின் அடிப்படை மற்றும் நீர்த்த வருவாய் (₹)		1.15	0.92
பங்கு ஒன்றின் பெயரளவு மதிப்பு (₹)		10.00	10.00

தன்னிச்சையான தணிக்கையாளர்களின் அறிக்கை

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் உறுப்பினர்களுக்கு தனித்த நிதி அறிக்கைகளின் தணிக்கை குறித்த மதிப்புரை

1. நாங்கள் 31 மார்ச் 2023 தேதியிட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ("வங்கி") இருப்புநிலைக் குறிப்பு, தலைமை அலுவலகத்தின் அதே தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான வங்கியின் லாப நட்ட கணக்கு, ரொக்கப் புழக்க அறிக்கை, முக்கிய கணக்குக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் இதர விளக்கக் குறிப்புகள் ஆகியன உள்ளடங்குமான தனித்த நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்திருக்கிறோம்.
   (i) எங்களால் தணிக்கை செய்யப்பட்ட 20 கிளைகள் மற்றும்,
   (ii) சட்டப்பூர்வ கிளை தணிக்கையாளர் தணிக்கை செய்த 2 வட்டார அலுவலகங்கள் உள்ளிட்ட 838 கிளைகள்
   (iii) உள்ளூர் தணிக்கையாளர் தணிக்கை செய்த 4 வெளிநாட்டு கிளைகள்

2. ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா பிறப்பித்த வங்கிகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகளுக்கு ஏற்ப எங்களாலும், இதர தணிக்கையாளர்களாலும் தணிக்கை செய்யப்பட்ட கிளைகளை வங்கி தேர்ந்தெடுத்துள்ளது. இந்த இருப்புநிலைக் குறிப்பிலும், இலாப நட்ட அறிக்கையிலும், ரொக்கப் புழக்க அறிக்கையிலும் தணிக்கைக்கு உட்படாத 2418 கிளைகளின் (47 வட்டார அலுவலகங்கள் மற்றும் சிங்கப்பூர் கிளை உள்ளிட்டது) பலாபலன்கள் அடங்கும்.தணிக்கைக்கு உட்படாத கிளைகளின் பங்கு 26.38% முன்பணத்திலும், 55.00% வைப்பு தொகையிலும், 60.79% வட்டி வருமானத்திலும், 64.92% வட்டி செலவிலும் அடங்கும்.
   எங்கள் கருத்துபடியும், எங்களுக்குக் கிடைத்த தகவல் மற்றும் எங்களுக்குத் தரப்பட்ட விளக்கங்கள் ஆகியவற்றின்படியும், மேற்குறிப்பிட்ட தனித்த நிதி அறிக்கைகள் 1949 ஆம் ஆண்டு வங்கி விதிமுறை சட்டத்தின்படி (" சட்டம்") தேவையான தகவல்களை வங்கிக்கு தேவையான முறையில் வழங்குவதோடு இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கியல் கொள்கைகளுக்கும் உட்பட்டுள்ளன,மற்றும்:
   i) இருப்புநிலைக் குறிப்பை, தேவையான எல்லா விவரங்களும் உள்ளடங்கும் முழுமையான, நியாயமான இருப்புநிலைக் குறிப்பின் குறிப்புகளுடன் சேர்த்து வாசிக்கும்போது, 31 மார்ச் 2023 நிலவிய வங்கியின் செயல்பாட்டு நிலையை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகிறது;
   ii) லாப நட்டக் கணக்கை, அதன் குறிப்புகளுடன் சேர்த்து வாசிக்கும் போது அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய உண்மையான லாப இருப்புத்தொகையைக் காட்டுகிறது மற்றும்
   iii) ரொக்கப் புழக்க அறிக்கை அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய ரொக்கப் புழக்கத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகிறது.

கருத்துக்கான அடிப்படை

2. நாங்கள் இந்திய சட்டபூர்வ முதன்மை கணக்காய்வாளர்கள் கழகம் (ICAI) வெளியிட்ட தணிக்கை தரங்களுக்கு (SAs) ஏற்ப எங்கள் தணிக்கையை நடத்தினோம். இந்தத் தரங்களின்கீழ் எங்களுக்குள்ள பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் தனித்த நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளரின் பொறுப்புகள் பகுதியல் மேற்கொண்டு விளக்கப்பட்டுள்ளன. நாங்கள் இந்திய சட்டபூர்வ முதன்மை கணக்காய்வாளர்கள் கழகம் வெளியிட்ட நெறிமுறைக் குறியீட்டுக்கும் தனித்த நிதி அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்வதற்குத் தேவையான சட்டத்தின் நெறிமுறை நிபந்தனைகளுக்கும் மற்றும் இந்தியாவில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய சட்டபூர்வ முதன்மை தணிக்கை கணக்காய்வாளர்கள் கழகத்தால் வெளியிடப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் படியும், மற்றும் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவால் வெளியிடப்பட்ட வங்கிகளுக்கான கட்டுப்பாடு விதி 1949, பிரிவு 29-ன் படியும், ஏற்ப வங்கியின் தொடர்பில்லாத சுதந்திர அமைப்பாகச் செயல்பட்டு, இந்த நிபந்தனைகள் மற்றும் நெறிமுறைக் குறியீட்டின்படி எங்களது மற்ற நெறிமுறைப் பொறுப்புகளை நிறைவேற்றினோம். நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்கள் போதுமானவை என்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்கப் பொருத்தமானவை என்றும் நாங்கள் நம்புகிறோம்.

வலியுறுத்தப்படும் விவகாரம்

3. பின்வருபவற்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்:
   தன்னிச்சையான நிதிநிலை அறிக்கையின் அட்டவணை 18ல் உள்ள பின்வரும் குறிப்புகளுக்கு நாங்கள் கவனம் செலுத்துகிறோம்.
   i) குறிப்பு எண் 7.2 தொகை நிலுவையில் உள்ள இடங்களில் முன்கூட்டியே செலுத்தப்பட்ட வரி மதிப்பீடு (நிகர ஒதுக்குகள்), மேல் முறையீடுகள் மற்றும் சர்ச்சையின் கீழ் உள்பட்டவை சமரசத்தின் கீழ் உள்ளன.
   ii) குறிப்பு 7.3ல் விவரிக்கப்பட்டுள்ள அங்கீகாரம் வழங்காத கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்ட பல்வேறு சர்ச்சைக்குரிய நேரடி மற்றும் மறைமுக வருமான வரிக்கான காரணங்கள் குறிப்பிடபட்டுள்ளன.
   iii) பணமதிப்பு நீக்கம் தொடர்பான நிதிநிலை அறிக்கையின் அத்தியாயம் 18, குறிப்பு எண் 14 h(1) குடும்ப ஓய்வூதிய தொகையை திருத்தியமைக்கும் கூடுதல் பொறுப்பு ரூ425.86 கோடியை வங்கியின் இலாப நட்டக் கணக்கில் ரூ85.17 கோடியை வசூலித்துள்ளது. மார்ச் 31, 2023ல் முடிவடைந்த ஆண்டு மற்றும் மீதி செலுத்தப்படாத செலவு ரூ 255.52 கோடி ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கை எண் **RBI/2021-22/105 DOR.ACC. REC.57/21.04.018/2021-22** அக்டோபர் 4, 2021 ன் அடிப்படையில் அடுத்த ஆண்டிற்கு கொண்டு செல்லப்பட்டது.
   iv) குறிப்பு எண் 17, Covid – 19 எந்த அளவிற்கு உள்ளது என்பதை விளக்கும் அறிக்கையில் வங்கியின் செயல்பாட்டில் சர்வதேச தொற்றுநோய்களின் பரவளின் தாக்கம் எதிர்கால முன்னேற்றங்களைப் பொறுத்தது, அது மிகவும் நிச்சயமற்றவை.
   மேற்கானும் விவகாரங்கள் தொடர்பான எங்கள் கருத்தில் எந்தத் திருத்தமும் இல்லை.

முக்கிய தணிக்கை விவகாரங்கள்

4. முக்கிய தணிக்கை விவகாரங்கள் என்பது, எங்களது நிபுணத்துவ மதிப்பீட்டின்படி, நடப்பு கால கட்டத்தில் நிதி அறிக்கைகள் குறித்த எங்கள் தணிக்கைக்கு மிகவும் முக்கியத்துவமிக்க விவகாரங்களாகும். நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த தணிக்கையின் அடிப்படையில் இவ்விவகாரங்கள் ஆராயப்பட்டு,அதற்கேற்ப எங்கள் கருத்தை வகுக்கையில், இவ்விவகாரங்கள் குறித்து தனியொரு கருத்தை நாங்கள் வெளியிடவில்லை. பின்வரும் விவகாரங்கள் எங்கள் அறிக்கையில் தெரியப்படுத்தப்பட வேண்டிய முக்கிய தணிக்கை விவகாரங்கள் என நாங்கள் நிர்ணயித்திருக்கிறோம்.
   மேற்கானும் விவகாரங்கள் தொடர்பான எங்கள் கருத்தில் எந்தத் திருத்தமும் இல்லை.

முழுமையான தனித்த அறிக்கை மற்றும் தணிக்கையாளர்கள் அறிக்கை தவிர வேறு தகவல்கள்

5. இதர தகவல்களுக்கு வங்கி இயக்குநர்களின் சபையே பொறுப்பாகும். இதர தகவல்கள்,பெரு நிறுவன நிர்வாக அறிக்கை (ஆனால் தன்னிச்சையான நிதி அறிக்கை மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கை மற்றும் அதனைச் சார்ந்தது அல்ல). தணிக்கையாளர்களிடம் இருந்து தற்சமயம் பெற்ற அறிக்கை மற்றும் இயக்குநர்களின் அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள வருடாந்திர அறிக்கை மற்றும் அதைச் சார்ந்தவைகள் இந்த தேதிவரை உள்ளடக்கியது. இந்தப் பிரதிப்பு தேதியிலிருந்து இது கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
   தன்னிச்சையான நிதி அறிக்கை என்பது எங்கள் கருத்துப்படி இதரத் தகவல்கள் மற்றும் Basel III-ன் கீழ் உள்ள வெளிப்பாடான Pillar 3 வெளியீடை உள்ளடக்கியது அல்ல மற்றும் அதனால் வரும் எந்தவொரு உறுதியான முடிவையும் நாங்கள் வெளிப்படுத்தமாட்டோம், செய்யவும் கூடாது.
   இதன் தொடர்பான எங்களது தணிக்கையாளரின் தன்னிச்சையான நிதி அறிக்கைபடி, மேற்கண்ட இதரத் தகவல்களையும் படிக்க வேண்டியது எங்கள் கடமை. அவ்வாறு செய்யும் பொழுது இதரத் தகவல்களின் பொருள் ரீதியாக தன்னிச்சையான நிதி நிலை அறிக்கை அல்லது தணிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் முரணாக இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும் இல்லையெனில் அது பொருள் ரீதியாக தவறாகச் சொல்லப்பட்டதாகிவிடும்.
   ஒரு வேளை, இந்தத் தேதிக்கு முன்னரே நாங்கள் பெற்ற பிறகு தகவல்கள் மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கை அடிப்படையில், இதரத் தகவல்களின் பொருள் தவறாக உள்ளது எனும் முடிவு செய்யும் பட்சத்தில் நாங்கள் அதன் உண்மைத் தன்மையை புகார் அளிக்க வேண்டும். இது தொடர்பாக தெரிவிக்க எதுவும் இல்லை.
   இயக்குநர்களின் அறிக்கை, வருடாந்திர அறிக்கையின் இணைப்புகள் உட்பட்ட அறிக்கை மற்றும் அதன் சார்ந்த அறிக்கையை வாசிக்கும்போது ஏதேனும் தவறான பொருள் மற்றும் விளக்கம் இருக்கும்படி முடிவுக்கு வரும் பட்சத்தில், அதனை நாங்கள் ஆளுகைக்கு உட்பட்டவர்களுக்கு தகவல் கொடுக்க வேண்டும்.

தனித்த நிதி அறிக்கைகளில் நிர்வாகத்திற்கும் ஆளுமை பொறுப்பிலுள்ளவர்களுக்கும் உள்ள பொறுப்புகள்

6. இந்தத் தனித்த நிதி அறிக்கைகள், ICAI வெளியிட்ட கணக்கியல் தரங்கள், 1949 ஆம் ஆண்டு வங்கி விதிமுறை சட்டத்தின் பிரிவு 29ன் விதிமுறைகள், ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா அவ்வப்போது வெளியிடும் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டிகள் ஆகியன உள்ளடங்கும் இந்தியாவில் பொதுவாக ஏற்கப்படும் கணக்கியல் கொள்கைகளுக்கு ஏற்ப வங்கியின் நிதிநிலையையும், நிதிப் பலாபலனையும், ரொக்கப் புழக்கத்தையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் தயாரிக்கப்படுவது வங்கி இயக்குநர்கள் சபையின் பொறுப்பாகும். வங்கியின் சொத்துகளைப் பாதுகாக்கவும் மோசடிகளையும் இதர ஒழுங்கீனங்களையும் தடுக்கவும் கண்டுபிடிக்கவும், சட்ட விதிமுறைகளின்படி போதுமான கணக்கியல் பதிவேடுகளை நிலை நாட்டுவது; பொருத்தமான கணக்கியல் கொள்கைகளைத் தேர்ந்தெடுத்து அமலாக்குவது; நியாயமான, விவேகமான மதிப்பீடுகளையும் உத்தேசங்களையும் செய்வது; போதுமான உள் நிதிக் கட்டுப்பாடுகளை அமலாக்கி நிலைநாட்டுவது ஆகியன இப்பொறுப்பில் உள்ளடங்கும். மோசடி அல்லது பிழையால், விவரப்பிழைகள் இல்லாமல் உண்மையான, நியாயமான கண்ணோட்டத்தை வழங்கும் வகையில் நிதி அறிக்கையைத் தயாரித்துப் படைக்கும் வகையில் கணக்கியல் பதிவேடுகளின் துல்லியத்தையும் முழுமையையும் உறுதிப்படுத்துவதற்கு இவை அவசியம்
   நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் வங்கியால் தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றலை மதிப்பிட்டு, பொருத்தமாயின், இது தொடர்பான விவகாரங்களை வெளியிடுவதும் தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனத்திற்கான கணக்கியல் அடிப்படையைப் பயன்படுத்துவதும் நிர்வாகத்தின் பொறுப்பு. வங்கியைக் கலைக்க அல்லது செயல்பாட்டை நிறுத்த நிர்வாகம் எண்ணினால் அல்லது இவ்வாறு செய்வதைத் தவிர வேறு சாத்தியமான மாற்றுவழி இல்லாத சூழ் நிலைகள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு. வங்கியின் நிதி அறிக்கை செயல்முறையை மேற்பார்வையிடுவதற்கும் அந்த இயக்குநர்கள் குழு பொறுப்பாகும்.

நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளர்களின் பொறுப்புகள்

7. மொத்த நிதி அறிக்கைகளில், மோசடி அல்லது பிழையால், விவரப் பிழைகள் இல்லாதிருக்கிறதா என்பதற்கு நியாயமான உறுதி பெற்று, எங்கள் கருத்தை உள்ளடக்கும் தணிக்கையாளர்களின் அறிக்கையை வெளியிடுவதே எங்கள் இலக்கு. நியாயமான உறுதி என்பது உயர் நிலையிலான உறுதியாக இருந்தாலும், தணிக்கை தரங்களுக்கு ஏற்ப நடத்தப்படும் தணிக்கை, இருக்கக்கூடிய விவரப் பிழையை எப்போதும் கண்டுபிடித்துவிடும் என்பதற்கு உத்தரவாதமில்லை. மோசடியால் அல்லது பிழையால் விவரப் பிழைகள் ஏற்படலாம்.விவரப் பிழைகள் தனியாக அல்லது மொத்தமாக, இந்த நிதி அறிக்கைகளின் அடிப்படையில் பயன்பாட்டாளர்கள் எடுக்கும் பொருளியல் தீர்மானங்களை பாதிக்ககூடும் என நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட்டால், அவை முக்கியமானவையாகக் கருதப்படும்.

- மோசடி அல்லது பிழையால் நிதி அறிக்கைகளில் விவரப் பிழைகள் நேரக்கூடிய அபாயத்தை அடையாளம் கண்டு, மதிப்பிட்டு, இந்த இடர்களுக்குப் பொருத்தமான தணிக்கை நடை முறைகளை மேற்கொண்டு, எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்குவதற்குப் போதுமான, பொருத்தமான தணிக்கை ஆதாரங்களைப் பெறவேண்டும். பிழையால் நேரும் விவரப்பிழையைவிட மோசடியால் நேரும் விவரப் பிழையை அடையாளம் காணாதிருக்கக்கூடிய அபாயம் அதிகம். ஏனெனில், மோசடியில் கூட்டுச்சதி, ஏமாற்று, வேண்டுமென்றே செய்யப்பட்ட விடுபாடுகள், பிறழ்கூற்று அல்லது உள் கட்டுப்பாடு மீறல் ஆகியவை இருக்கக்கூடும்.
- தணிக்கை நடைமுறைகளை வடிவமைப்பதற்காக தணிக்கை தொடர்பான உள்கட்டுப்பாடு பற்றிய புரிதலை அந்தந்த சூழ்நிலைகளை பொருத்ததாக பெற வேண்டும்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும், நிர்வாகம் செய்த கணக்கியல் உத்தேசங்கள் மற்றும் அது தொடர்பான வெளிப்பாடுகள் ஆகியவற்றின் நியாயத்தையும் பரிசீலிக்க வேண்டும்.
- தொடர்ந்து செயல்படக்கூடிய கணக்கியல் அடிப்படையை நிர்வாகம் பயன்படுத்தியது பொருத்தமானதா என்பது பற்றி தீர்மானிக்கவேண்டும். அதோடு, பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையில், வங்கி தொடர்ந்து செயல்படக்கூடிய நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றல் குறித்து குறிப்பிடத்தக்க ஐயம் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் தொடர்பான விவர நிச்சயமின்மை இருக்கிறதா என்பதை தீர்மானிக்க வேண்டும். விவர நிச்சயமின்மை இருப்பதாக நாங்கள் தீர்மானித்தால்,நிதி அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள அது தொடர்பான வெளிப்பாடுகள் குறித்து எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்க வேண்டும், அல்லது இந்த வெளிப்பாடுகள் போதுமானவையாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தைத் திருத்தியமைக்க வேண்டும். எங்களது தீர்மானங்கள், தணிக்கையாளர்களின் அறிக்கை தேதி வரை பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையிலானவை. ஆயினும், வருங்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள். வங்கி தொடர்ந்து செயல்படக்கூடிய ஆற்றலை இழப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.
- வெளிப்பாடுகள் உட்பட, நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த படைப்பு, அமைப்புமுறை, உள்ளடக்கம் ஆகியவற்றையும், நியாயமாகப் படைக்கப்படும் வகையில் அடிப்படை பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் நிதி அறிக்கைகள் பிரதிநிதிக்கிறதா என்பதையும் பரிசீலிக்கவேண்டும்.

பொருள்நிலை என்பது முழுமையான தன்னிச்சையான நிதிநிலை அறிக்கைகளின் தவறான விளக்கங்களின், தனித்தனியாக அல்லது மொத்தமாக பொருளாதார முடிவுகளின் தன்னிச்சையான நிதிநிலை அறிக்கைகளின் அறிவுள்ள பயனர் செல்வாக்கு செலுத்தலாம்.

நாங்கள் (i) தணிக்கை வேலைகளை திட்டமிடுவது மற்றும் எங்கள் வேலையின் முடிவுகளை மதிப்பீடு செய்வதில் மற்றும் (ii) எந்தவொரு விளைவையும் மதிப்பீடு செய்ய தன்னிச்சையான நிதி நிலை அறிக்கைகளின் தவறான விளக்கங்கள் அடையாளம் காண அளவு சாரா மற்றும் தரமான காரணிகளை கருதுகிறோம்.

தணிக்கையின் திட்டமிடப்பட்ட அளவு, நேரம், தணிக்கையின்போது உள் கட்டுப்பாட்டில் நாங்கள் அடையாளம் காணும் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளிட்ட தணிக்கையின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இதர விவகாரங்களையும் ஆளுமை பொறுப்பிலுள்ளவர்களிடம் நாங்கள் தெரியப்படுத்துகிறோம்.

சுயேச்சை நடைமுறை தொடர்பான நெறிமுறை நிபந்தனைகளுக்கு நாங்கள் உட்பட்டதாகவும் ஆளுமை பொறுப்பிலுள்ளவர்களிடம் அறிக்கை சமர்ப்பிப்போம். அதோடு, எங்கள் சுதந்திரத்தையும், பொருந்துமாயின் அதைச் சார்ந்த பாதுகாப்புகளையும், பாதிக்ககூடும் என நியாயமாகக் கருதப்படும் எல்லா உறவுமுறைகளையும் இதர விவகாரங்களையும் அவர்களிடம் தெரியப்படுத்துவோம்.
ஆளுமை பொறுப்பிலுள்ளவர்களிடம் தெரியப்படுத்தும் விவகாரங்களிலிருந்து, நடப்பு காலகட்டத்தின் நிதி அறிக்கைகளின் தணிக்கைக்கு மிகவும் முக்கியமான விவகாரங்களை நிர்ணயித்து,முக்கிய தணிக்கை விவகாரங்களை அடையாளம் காண்போம். இவ்விவகாரம் குறித்த பொது வெளிப்பாட்டை விலக்கும் சட்டம் அல்லது விதிமுறை இருந்தாலொழிய அல்லது, அரிய சூழ்நிலைகளில், ஒரு விவகாரத்தை வெளியிடுவதால் பொது நலனைவிட அதிக பாதிப்பு நேரக்கூடும் என்ற நியாயமான எதிர்பார்ப்பால் விவகாரத்தை எங்கள் அறிக்கையில் வெளியிடக்கூடாது என நாங்கள் நிர்ணயித்தாலொழிய,எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கையில் இவ்விகாரங்களை நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

இதர விவகாரம்

8. வங்கியின் தனித்த நிதிநிலை அறிக்கைகளில் உள்ளடங்கும் 842 கிளைகள் (2 வட்டார அலுவலகங்கள் 4 வெளிநாட்டு கிளைகள் உள்ளிட்டது) நிதி அறிக்கைகளை தகவலை நாங்கள் தணிக்கை செய்யவில்லை இவற்றின் நிதி அறிக்கைகள் நிதி நிலை தகவல் 31 மார்ச் 2023 நிலவரப்படி ரூ 1,62,325.70 (கோடிகளில்) மொத்த சொத்துக்களையும் அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான ரூ10,896.78 (கோடிகளில்) மொத்த வருமானத்தையும் பிரதிபலிக்கின்றன. இந்தக் கிளைகள் மற்றும் செயலாக்க மையங்கள் 45.24% முன்பணம், 43.57% வைப்புத்தொகை மற்றும் 31 மார்ச் 2023-ல் 22.01% செயல்படாத சொத்துக்கள் மற்றும் 31 மார்ச் 2023ல் முடிவடைந்த 28.25% வருவாய் ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்த கிளைகளின் நிதி அறிக்கைகளை தகவலை இணைத் தணிக்கையாளர்கள் மற்றும் இந்த கிளைகளின் நிதிநிலை அறிக்கை தகவலை இணைத் தணிக்யாளர்கள் தணிக்கை செய்தனர் மற்றும் இதுவரை அது தொடர்பான எங்கள் கருத்து, கிளைகளை பொறுத்தவரையில் சேர்க்கப்பட்டுள்ள தொகைகள் மற்றும் அது தொடர்பான வெளிபாடுகள் அத்தகைய கிளை தணிக்யாளர்களின் அறிக்கையின் அடிப்படையில் மட்டும் உள்ளன.

இவ்விவகாரத்தின் தொடர்பிலான எங்கள் கருத்தில் எந்தத் திருத்தமும் இல்லை.

இதரசட்ட ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை

9. இருப்புநிலைக் குறிப்பும் இலாப நட்டக் கணக்கும் வங்கி ஒழுங்குமுறை சட்டம், 1949 பிரிவு 29க்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன;
   மேலே பத்தி 6 முதல் 8 வரை சுட்டிக்காட்டப்பட்டுள்ள தணிக்கையின் வரம்புகளுக்கு இணங்கவும் வங்கி கம்பெனிகள் (நிறுவனங்கள் கொள்முதல் மாற்றம்) சட்டம், 1970/1980ன் தேவைகளுக்கு ஏற்பவும், அதனைத் தொடர்ந்து தேவைப்படும் அறிவிப்புகளின் வரம்புகளுக்க இணங்கவும் நாங்கள் பின்வருமாறு தெரிவிக்கிறோம்:-
   a) நாங்கள் எங்களுடைய தணிக்கை நோக்கத்திற்குத் தேவையானவை என்று எங்கள் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரை கருதுகின்ற எல்லா தகவல்களும் விளக்கங்களும் எங்களுக்குக் கிடைத்துள்ளன. அவை எங்களுக்கு மனநிறைவு அளித்துள்ளன
   b) எங்கள் கவனத்திற்கு வந்துள்ள வங்கியின் கொடுக்கல் வாங்கல்கள் எல்லாம் இந்த வங்கியின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்கின்றன, மற்றும்
   c) வங்கி கிளைகளிலிருந்தும் அலுவலகங்களிலிருந்தும் பெறப்பட்டவை எங்கள் கணக்குத்தணிக்கை நோக்கத்திற்குப் போதுமானவை என்று காணப்பட்டுள்ளன.

10. மார்ச் 17, 2020 தேதியிட்ட DOS.ARG.No.6270/08.91.001/2019-20 கடிதத்தின்படி "பொதுத்துறை வங்கிகளில் சட்ட ரீதியான மத்திய கணக்காய்வாளர்கள் (SCAS) நியமனம் அறிக்கை, SCAS களுக்கான கடமைகள் 2019-20 நிதியாண்டில் இருந்து", மே 19 2020 தேதியிட்ட ரிசர்வ் வங்கியால் (RBI) வழங்கப்பட்ட தகவல் தொடர்புடன் படிக்கவும். மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பத்தி 2ல் உள்ள கடிதத்தில் உள்ள விசயங்கள் குறித்தும் கீழ்கண்டவாறு அறிக்கை செய்கிறோம்.
   a) எங்கள் கருத்துப்படி மேற்கூறிய தன்னிச்சையான நிதி நிலை அறிக்கைகள் ICAI ன் கணக்கியல் தரங்களுடன் பொருந்துகிறது, மற்றும் ஓரளவுக்கு RBI பரிந்துறைத்த கணக்கியல் கொள்கையுடன் பொருந்தாது.
   b) நிதி பரிவர்த்தனைகள் அல்லது வங்கிகளின் செயல்பாட்டில் ஏதேனும் பாதகமான விளைவுகள் குறித்து அவதானிப்புகள் மற்றும் கருத்துகள் எதுவும் இல்லை.
   c) நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 164-ன் துணைப்பிரிவு (2)ன் அடிப்படையில் மார்ச் 31, 2023 தேதியின்படி இயக்குநர்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வமான பிரதிநித்துவங்களின் அடிப்படையில்,இயக்குநர்கள் யாரும் மார்ச் 31, 2023 அன்று இயக்குநர்களாக நியமிக்கப்படுவதற்கு தகுதியற்றவர்களாக இல்லை.
   d) கணக்குகள் பராமரிப்பு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட பிற விசயங்கள் தொடர்பான தகுதிகள், இட ஒதுக்கீடு அல்லது பாதகமான கருத்துகள் எதுவும் இல்லை.
   e) நிதி அறிக்கையின் மீது வங்கியின் உள்ள நிதி கட்டுப்பாடுகளின் போதுமான அளவு மற்றும் செயல்பாட்டு கட்டுப்பாடு பற்றிய எங்கள் தணிக்கை அறிக்கை இந்த அறிக்கையின் இணைப்பு A-ல் கொடுக்கப்பட்டுள்ளது. எங்கள் அறிக்கை வங்கியின் உள்ள நிதி கட்டுப்பாடு குறித்த ஒரு மாற்றமில்லாத கருத்தை மார்ச் 31, 2023 நிதி அறிக்கையை விட வெளிப்படுத்துகிறது.

11. நாங்கள் மேற்கொண்டு தெரிவிப்பவை:
   a) நாங்கள் பரிசீலித்த வரையில் அவை முறையாக வைத்திருக்கப்படுவதோடு, நாங்கள் வருகை கிளைகளிலிருந்தும் எங்கள் தணிக்கைக்குத் தேவையான போதிய முறையான பலாபலன்கள் எங்களுக்குக் கிடைத்தன
   b) இந்த அறிக்கை மூலம் குறிப்பிடப்படும் இருப்புநிலைக் குறிப்பு, லாப நட்டக்கணக்கு, ரொக்கப் புழக்க அறிக்கை ஆகியன நாங்கள் வருகையளிக்காத கிளைகளிலிருந்தும் கிடைத்த கணக்கு ஏடுகளோடும் பலாபலன்களோடும் இணக்கமாக இருக்கின்றன
   c) 1949ஆம் ஆண்டு வங்கி விதிமுறை சட்டத்தின் பிரிவு 29ன் கீழ் வங்கியின் கிளை தணிக்கையாளர்கள் தணிக்கை செய்த கிளை அலுவலகங்களின் கணக்குகள் மீதான அறிக்கைகள் எங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த அறிக்கை தயாரிப்பதில் அவற்றை நாங்கள் முறையாகக் கையாண்டு இருக்கிறோம்; மற்றும்
   d) எங்கள் கருத்துப்படி இருப்புநிலைக் குறிப்பு, லாப நட்டக்கணக்கு, ரொக்கப் புழக்க அறிக்கை ஆகியன ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா வரையறுத்த கணக்கியல் கொள்கைளுடன் முரண்பாடில்லாத அளவுக்கு, ஏற்புடைய கணக்குத் தரங்களுக்கு ஏற்ப இருக்கின்றன.

MAS அறிவிப்பு 608ன்படி தெரிவிக்க வேண்டியவை:
வங்கியின் பெறுதல் நடவடிக்கை மற்றும் கலைப்பு நடவடிக்கை அல்லது அதற்கு சமமான நடவடிக்கை இடம்பெறும் பட்சத்தில் வங்கி தோற்றிவிக்கப்பட்ட தாயக நாட்டிலிருந்து வங்கி பொறுப்பு அதிகாரி நியமிக்கப்படும் பட்சத்தில் எங்கள் வங்கியின் சிங்கப்பூர் கிளை வைப்புதாரர்களுக்கு எங்கள் தாயக வைப்புதாரர்களைவிடக் குறைந்த முக்கியத்துவம் தரப்படாது என்பதை தெரிவிக்க விரும்புகிறோம்.

AJAY KUMAR SRIVASTAVA
நிர்வாக இயக்குநர் & தலைமை நிர்வாக அதிகாரி

S SRIMATHY
செயல் இயக்குநர்

SANJAY VINAYAK MUDALIAR
செயல் இயக்குநர்

இயக்குநர்கள்

ANNIE GEORGE MATHEW, VIVEK AGGARWAL, SURESH KUMAR RUNGTA, SANJAYA RASTOGI, B CHANDRA REDDY, DEEPAK SHARMA

Chartered Accountants

For **S N NANDA & CO**
Chartered Accountants
FRN 000685N

PUNEETT NANDA
Partner
M No : 092435

For **YOGANANDH & RAM LLP**
Chartered Accountants
FRN 005157S/S200052

N RAVISHANKAR
Partner
M No : 220436

For **S N KAPUR & ASSOCIATES**
Chartered Accountants
FRN 001545C

SUYASH SN. KAPUR
Partner
M No : 403528

For **NANDY HALDER & GANGULI**
Chartered Accountants
FRN 302017E

RANA PRATAP NANDY
Partner
M No : 051027

12.05.2023 சென்னை, இந்தியா

கணக்குகளுக்கான குறிப்புகள் தணிக்கையான நிதியறிக்கைகளின் முக்கிய அங்கம். அறிக்கைகள், வங்கி நிலவரங்கள் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ள வங்கியின் தணிக்கை செய்யப்பட்ட முழு நிதி அறிக்கைகளைப் பார்க்க வேண்டும். இதை வேண்டுகோளின்படி கீழ்கண்டவாறு பெறலாம்:

The Chief Executive,
Singapore Branch, 64 Cecil St. #03-00,
IOB Building, S(049711)
e-mail: iobces@iob.com.sg